பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
31 07 2025 *THURSDAY* 6 45 *AM*
வணக்கம்-மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- *பிரதமரின், விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவு திட்டத்தின் கீழ், 20வது தவணைத் தொகையை பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை மறுநாள் விடுவிக்கிறார்.*
- *2026ஆம் ஆண்டுக்கான பத்ம விருதுகளுக்கு விண்ணப்பிப்பதற்கான காலவரம்பு, ஆகஸ்ட் மாதம் 15ஆம் தேதிவரை நீடிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.*
- *நாட்டிலேயே மூன்றாவது பெரிய மென்பொருள் ஏற்றுமதி மாநிலமாக தமிழகம் திகழ்வதாக துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் கூறியுள்ளார்.*
- *காவிரி – குண்டாறு இணைப்பு திட்டத்தை, திமுக அரசு கிடப்பில் போட்டுள்ளதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.*
- *இந்தியா – இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான ஐந்தாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி, இன்று லண்டனில் தொடங்குகிறது.*

*>>>>>><<<<<<*

*பிரதமரின், விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவு திட்டத்தின் கீழ், 20வது தவணைத் தொகையை விடுவிப்பதற்கான, ஆலோசனைக் கூட்டம், வேளாண் துறை அமைச்சர் திரு. சிவராஜ்சிங் சௌஹான் தலைமையில் நேற்று நடைபெற்றது.*

*புதுதில்லியில் நேற்று நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய அவர் அதிக எண்ணிக்கையிலான விவசாயிகளுக்கு இந்த திட்டத்தின் பலன் சென்றடையும் விதத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளை அறிவுறுத்தினார்.*

*நாளை மறுநாள் உத்தரபிரதேச மாநிலம், வாரணாசியில் நடைபெறும் விழாவில் 20வது தவணைத்தொகையை பிரதமர் திரு. நரேந்திர மோடி விடுவிக்கவுள்ளதாகவும், அதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.*

*அதிக எண்ணிக்கையிலான விவசாயிகள் இந்த நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் அதிகாரிகளை வலியுறுத்தினார்.*

*>>>>>><<<<<<*

*2026ஆம் ஆண்டுக்கான பத்ம விருதுகளுக்கு விண்ணப்பிப்பதற்கான காலவரம்பு, ஆகஸ்ட் மாதம் 15ஆம் தேதிவரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.*

*பத்ம விபூஷன், பத்மபூஷன் மற்றும் பத்மஸ்ரீ விருதுகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர், ராஷ்ட்ரிய புரஸ்கார் இணையதளம் மூலம் மட்டுமே விண்ணப்பிக்க முடியும் என்று கூறப்பட்டுள்ளது.*

*இந்த விருது பெறுபவர்களின் பட்டியல், அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் அறிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*>>>>>><<<<<<*

*ரயில் விபத்துகளை தடுக்கும் விதத்தில், உள்நாட்டிலேயே புதிய தொழில்நுட்பத்துடன் தயாரிக்கப்பட்டுள்ள Kavach 4.0 பாதுகாப்பு முறையை Kota – Madura இடையேயான வழித்தடத்தில் விரைவில் அறிமுகப்படுத்தவிருப்பதாக ரயில்வே அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.*

*மக்களவையில் நேற்று கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அவர், ரயில் பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கில், Kavach 4.0 குறுகிய காலத்தில் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டுள்ளதாக கூறினார்.*

*இது, பிரதமரின் உள்நாட்டிலேயே தயாரிப்போம் திட்டத்தின் கீழ், இந்த பாதுகாப்பு முறை அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.*

*>>>>>><<<<<<*

*நாட்டிலேயே மூன்றாவது பெரிய மென்பொருள் ஏற்றுமதி மாநிலமாக தமிழகம் திகழ்வதாக துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.*

*தமிழகத்தின் புத்தமை அறிவுசார் சொத்துரிமை முதலாவது மாநாட்டை நேற்று தொடங்கி வைத்துப் பேசிய அவர், இந்தியாவின் மென்பொருள் தலைநகரமாக சென்னை விளங்குவதாக கூறினார்.*

*நான் முதல்வன் திட்டத்தின் மூலம், தகவல் தொழில்நுட்பத்துறையின் பங்களிப்புடன் மாணவர்களின் திறன்கள் மேம்படுத்தப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.*

*தமிழகத்தை ஒரு புத்தாக்க தலைநகராகவும், அறிவுசார் சக்தி மையமாகவும் மாற்றுவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுத்துள்ளதாகவும் திரு. உதயநிதி ஸ்டாலின் குறிப்பிட்டார்.*

*>>>>>><<<<<<*

*தமிழகத்தில் மருத்துவ படிப்புக்கான கலந்தாய்வில், அரசு பள்ளிகளில் பயின்ற மாணவர்களுக்கான 7 புள்ளி ஐந்து சதவீத சிறப்பு ஒதுக்கீட்டு ஆணைகளை மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் நேற்று வழங்கினார்.*

*சென்னை, தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையில் நடைபெற்ற நிகழ்ச்சிக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த ஆண்டு 494 எம்பிபிஎஸ் இடங்களுக்கும், 119 பல் மருத்துவ இடங்களுக்கும் என மொத்தம் 613 இடங்களுக்கு கலந்தாய்வு நடத்தப்பட்டு, ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டதாக அவர் கூறினார்.*

*நீட் தேர்வு விலக்கு தொடர்பாக, சட்ட வழிமுறைகள் பின்பற்றப்பட்டு, அதற்கான தொடர் முயற்சிகளில் அரசு ஈடுபட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.*

*>>>>>><<<<<<*

*அஇஅதிமுக ஆட்சியில் கொண்டு வரப்பட்ட காவிரி – குண்டாறு இணைப்பு திட்டத்தை, அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக திமுக அரசு கிடப்பில் போட்டுள்ளதாக அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.*

*மக்களை காப்போம், தமிழகத்தை மீட்போம் என்ற பிரச்சாரப் பயணத்தை மேற்கொண்டுள்ள அவர், நேற்று ராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் பேசும்போது, காவிரி – குண்டாறு இணைப்பு திட்டத்திற்கு 14 ஆயிரத்து 400 கோடி ரூபாய் நிதி திட்ட வரைவு செய்யப்பட்டு, 700 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, அடிக்கல் நாட்டப்பட்டது.*

*ஆனால் அந்த திட்டத்தை திமுக அரசு நிறைவேற்றாமல் கிடப்பில் போட்டுள்ளதாக அவர் கூறினார்.*

*மாநிலத்தில் பள்ளிகளில் போதிய ஆசிரியர்கள், தலைமையாசிரியர்கள் இல்லை என்றும், மருத்துவமனைகளில் மருத்துவர்கள் இல்லை என்றும் அவர் குற்றம் சாட்டினார்.*

*படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்றும். காலிப் பணியிடங்கள் நிரப்பப்படும் என்று அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றப்படவில்லை என்று அவர் கூறினார்.*

*தமிழகத்தில் திமுக ஆட்சியில் மின் கட்டணம் 65 சதவீதம் உயர்ந்துள்ளதாகவும், அனைத்து வரிகளும் உயர்த்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.*

*நீட் தேர்வுக்கு விலக்கு பெற்றுத்தரப்படும் என்று அறிவித்த திமுக, அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று திரு. எடப்பாடி பழனிசாமி கேள்வி எழுப்பினார்.*

*>>>>>><<<<<<*

*திருப்பூர் தொழில்துறையினர் பயனடையும் வகையில் தொடங்கப்பட்டுள்ள SPREE 2025 என்ற புதிய ESI திட்டம், தொழிலாளர்களுக்கும். தொழில் துறையினருக்கும் மிகுந்த பலனளிக்கும் என்று கோவை மண்டல அலுவலர் திரு. கார்த்திகேயன் தெரிவித்தார்.*

*(சவுண்ட் பைட் – கார்த்திகேயன் 55 செகண்ட்ஸ்)*

*>>>>>><<<<<<*

*இருவரிச் செய்திகள்*

*வரும் செப்டம்பர் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா பொதுச்சபை கூட்டத்தில், பாலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரிப்பதற்கு கனடா ஆதரவு தெரிவிக்க முடிவு செய்துள்ளதாக அந்நாட்டு பிரதமர் திரு. Mark Carney தெரிவித்துள்ளார்.*

*>>>>>><<<<<<*

*ரஷ்யா, ஜப்பான் மற்றும் ஹவாய் தீவு பகுதிகளில் அறிவிக்கப்பட்டிருந்த சுனாமி முன்னெச்சரிக்கை நடவடிக்கை தற்போது தளர்த்தப்பட்டுள்ளது.*

*>>>>>><<<<<<*

*பஞ்சாப் மாநில அரசின் புதிய நில ஒருங்கிணைப்புச் சட்டத்தை எதிர்த்து, அம்மாநில விவசாயிகள் நேற்று டிராக்டர் பேரணி நடத்தினர்.*

*>>>>>><<<<<<*

*நெல்லையில் அரசு பொருட்காட்சியை தொடங்கி வைத்த தமிழக சட்டப்பேரவை தலைவர் திரு. அப்பாவு, சுமார் 3 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.*

*>>>>>><<<<<<*

*நாமக்கல் மாவட்டம், கொல்லிமலை உள்ளிட்ட பல்வேறு இடங்களில் நடைபெற்ற முகாம்களில், அரசு நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திருமதி. துர்கா மூர்த்தி வழங்கினார்.*

*>>>>>><<<<<<*

*ராணிப்பேட்டை மாவட்டத்தில் கறவை பசுக்களுக்கு 50 சதவீத மானியத்துடன் கூடிய ஊட்டச்சத்து தீவனம் வழங்கும் திட்டம், கால்நடை பராமரிப்பு துறையால் நேற்று அறிமுகப்படுத்தப்பட்டது.*

*>>>>>><<<<<<*

*திருப்பத்தூர் மாவட்ட காவல்துறை சார்பிலான பொதுமக்கள் குறைதீர்ப்பு கூட்டம் காவல்துறை கண்காணிப்பாளர் திருமதி. சியாமளா தேவி தலைமையில் நடைபெற்றது.*

*>>>>>><<<<<<*

கோவை, வேளாண்மை பல்கலைக் கழகத்தின் தாவரவியல் பூங்காவை, தமிழக சட்டப்பேரவையின் பொது கணக்கு குழுவினர் நேற்று ஆய்வு செய்தனர்.

>>>>>><<<<<<

திருத்தணி, சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில் கடந்த வாரத்தில் மட்டும் 64 லட்சம் ரூபாய், 112 கிராம் தங்கம், 4 கிலோ வெள்ளியை பக்தர்கள் காணிக்கையாக செலுத்தியுள்ளனர்.

>>>>>><<<<<<

ராமேஸ்வரம், அருள்மிகு ராமநாத சுவாமி திருக்கோவில் திருக்கல்யாண உற்சவ திருவிழா நேற்று விமரிசையாக நடைபெற்றது.

>>>>>><<<<<<

விளையாட்டுச் செய்திகள்

இந்தியா – இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான ஐந்தாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி, இன்று லண்டனில் தொடங்குகிறது.

இப்போட்டி பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறுகிறது.

ஐந்து போட்டிகளைக் கொண்ட இந்த தொடரில் இங்கிலாந்து 2 போட்டிகளிலும். இந்தியா ஒரு போட்டியிலும் வெற்றி பெற்றுள்ளன.

>>>>>><<<<<<

மக்காவ் ஓப்பன் பேட்மிண்டன் போட்டியின் ஒற்றையர் பிரிவின் இரண்டாவது சுற்றுக்கு இந்தியாவின் லக்ஷ்யா சென், ஆயுஷ் ஷெட்டி, தருண் மனப்பள்ளி ஆகியோர் முன்னேறியுள்ளனர்.

கலப்பு இரட்டையர் பிரிவில் துருவ் கபிலா மற்றும் தனிஷா கிராஸ்ட்டோ இணை இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

>>>>>><<<<<<

இந்தியா – ஆஸ்திரேலியா இடையேயானா 19 வயதுக்குட்பட்டோருக்கான கிரிக்கெட் போட்டிகள், வரும் செப்டம்பர் 21ஆம் தேதி நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<